# முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், கடலூர்

## O.S.No.329 of 2013

| | | |
|---|---|---|
| பெயர் | : | ராஜமோகன் |
| தந்தை பெயர் | : | வேணுகோபால் |
| பி.வா.த.சா | : | 1 |

1969ம் ஆண்டு 14வது சட்டத்தின் படி 12வது பிரிவின் கீழ் **12.03.2026** அன்று **திரு. M. ராஜகுமரேசன், B.Com., L.L.B.,** முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி, கடலூர் அவர்களால் சத்தியப் பிரமாணம் செய்விக்கப்பட்டது.

பிரதிவாதி சாட்சி 1 மீண்டும் அழைக்கப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்பட்டார்.

**வாதித் தரப்பில் குறுக்கு விசாரணை.**

(1) நான் 20 ஆண்டுகளாக ஓசூரில் குடியிருந்து வருகிறேன். அதற்கு முன்பு சுமார் 15 ஆண்டுகள் சென்னையில் வசித்து வந்தேன். எனது பள்ளி பருவத்திற்கு பிறகு நான் கடலூரில் தொடர்ந்து வசிக்கவில்லை என்றால் சரிதான். எனது சகோதரர் கடலுரில் சொந்தமாக கட்டிடத் தொழில் செய்து வருகிறார். அவர் B.E பட்டப்படிப்பு கர்நாட்டகா மாநிலத்தில் படித்தார்.

(2) எனது தாயாருக்கு வழக்கு சொத்து 3 ஏக்கர் சொத்துக்கள் மட்டும் தான் உள்ளது. எனது தந்தையார் பெயரில் 14 -15 ஏக்கர் நிலம் இருந்தது. எனது அம்மா மற்றும் அப்பா பெயரில் இருந்த சொத்துக்களை நான் எந்த காலத்திலும் பயிர் செய்யவில்லை என்றால் சரிதான். எனது சொத்துக்களை யார் தற்போது கவனித்துக்கொள்கிறார்கள் என்றால் நான் ஒரு நபரை நியமித்துள்ளேன் அவர் தான் எனது சொத்துக்களை கடலூரில் பார்த்துக்கொள்கிறார்.

(3) எனது தாயாருக்கு திருமணம் ஆவதற்கு முன்பாக அவரது தகப்பனாரால் வழககு

M.RAJAKUMARESAN Digitally signed by M.RAJAKUMARESAN Date: 2026.03.16 13:24:06 -0400

சொத்து எனது தாயார் பெயருக்கு எழுதிக்கொடுக்கப்பட்டது என்றால் 12.06.1965 அன்று மேற்படி வழக்கு சொத்து எனது தாயார் பெயருக்கு எழுதப்பட்டது . எனது பெற்றோர்களின் திருமண தேதி எனக்கு ஞாபகம் இல்லை. மேற்படி ஆவணம் எழுதிக்கொடுத்த பிறகு எனது தாயாருக்கும் அவரது பெற்றோர் வீட்டிற்கும்பேச்சு வார்த்தை இல்லாமல் போனது என்றால் சரியல்ல.

(4) நான் மற்றும் எனது தம்பி பிறந்த முதல் எனது தாய்மாமன் ஆன வாதியுடன் எந்த பேச்சுவார்த்தையும் இருந்தது கிடையாது என்றால் சரியல்ல. எனது 3 ஏக்கர் நிலத்தின் புதிய சர்வே எண் என்ன என்றால் 19/1 ஆகும். இந்த சர்வே எண் தெற்கால் இருப்பது 19/2 என்றாலும் அதற்கும் தெற்கால் இருப்பது 19/3 என்றாலும் அது பற்றி எனக்கு தெரியாது.

(5) எனது இடத்திற்கு தெற்கால் இருப்பது யாருடை நிலம் என்றால் வாதியின் நிலம் ஆகும். எனது சொத்திற்கும் வாதியின் சொத்திற்கும் இடையே சர்வே கல் உள்ளதா என்றால் இருந்தது. (சாட்சி அதன் பிறது இருக்கிறது என்று கூறினார்). எனது இடத்தினை நான் எப்போது அளந்து பார்த்தது இல்லை என்றால் சரியல்ல. சுமார் 2 ஆண்டுகளுக்கு முன்பு அளந்து பார்த்தேன். அவ்வாறு அளந்து பார்த்ததற்கான வருவாய் துறை அலுவலகத்தில் பணம் கட்டிய ரசீது வைத்துள்ளேன்.

(6) சர்வேயர் 19/1 நிலத்தை அளப்பதற்கு வருவதற்கு முன்பு வாதிக்கும் எனக்கும் அறிவிப்பு எழுத்துப்பூர்வமாக கொடுத்தாரா என்றால் கொடுத்தார். அதற்குன்டான அறிக்கையும் எழுத்துப்பூர்வமாக கொடுத்தாரா என்றால் கொடுத்தார். எனது சொத்திற்கும் வாதியின் சொத்திற்கும் இடையே ஒரு குட்டை உள்ளதை நான் பார்த்தது கிடையாது என்றால் சரிதான். அந்த குட்டை மூடப்பட்டிருப்பது எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. (சாட்சி தற்போது குட்டை இருந்தது இல்லை என்று

M.RAJAKUMARESAN Digitally signed by M.RAJAKUMARESAN Date: 2026.03.16 13:24:14 -0400

கூறினார்). நான் அனுபவித்து வரும் சொத்திற்கு கிழக்கால் ஒரு குட்டை இருந்து அது மூடப்பட்டு விட்டது என்பதனை அறிவதற்கு அதிகாரிகள்மூலம் நடவடிக்கை எடுப்பதற்கு எனக்கு எந்த ஆட்சேபணையும் கிடையாது.

(7) வாதிக்கும் எனக்கும் 1.25 ஏக்கர் சம்மந்தமாகத்தான் பிரச்சனை உள்ளது என்றால் சரியல்ல. வாதி 1.25 ஏக்கர் சம்மந்தமான பிரச்சணைக்காத்தான் வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. எனது சுவாதினத்தில் உள்ள சொத்தில் நான் பயிர் வைத்துள்ளேன். அதில் சுமார் 240 தென்னை மரங்கள் வைத்துள்ளேன்.

(8) வாதி அவருடைய பாகத்தில் என்ன பயிர் வைத்துள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. இந்தவழக்கிற்கு முன்பாக நடைபெற்ற வழக்கு சம்மந்தமாக ஏதும் எனக்கு தெரியாது என்றால் சரியல்ல. எனது பெற்றோர் உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த எந்த வழக்கிலும் வாதியை தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சரிதான். என்னுடைய இடத்தினை அளந்து சர்வேயர் கொடுத்த அறிக்கை என்னிடம் உள்ளதா என்றால் (நான் ஏன் எனது நிலத்தை அளக்க வேண்டும் என்று சாட்சி மறுவினா எழுப்பினார்).

(9) நான் 10 வருடங்களுக்கு மேலாக வருமான வரி செலுத்தி வருகிறேன். அதில் எனது நிலம் சம்மந்தமாக காண்பிக்கப்பட்டுள்ளதா என்றால் காண்பிக்கப்பட்டுள்ளது. வழக்கு சொத்தில் இருந்து வரும் வருமானம் எனது வருமான வரி கணக்குகளில் காட்டியுள்ளேனா என்றால் வழக்கு சொத்தில் இருந்து வருமாணம் வராததால் அதனை காண்பிக்கவில்லை.

(10) என்னிடம் காண்பிக்கப்படும் வரைபடம் சர்வே எண் 19க்கு உண்டான நில வரைபடத்தின் நகல் என்றால் சரிதான். மேற்படி ஆவணம் **வா.த.சா.ஆ. 6 ஆக**

M.RAJAKUMARESAN Digitally signed by M.RAJAKUMARESAN Date: 2026.03.16 13:24:20 -0400

**குறியீசெய்யப்படுகிறது.** சர்வே எண் 19/1 ல் 1.75 ஏக்கர் நிலம் மட்டும் தான் எனது அனுபவத்தில் உள்ளது என்பது எனக்கு தெரியுமா என்றால் நான் 3 ஏக்கர் நிலத்தை தான் அனுபவித்து வருகிறேன். வா.த.சா.ஆ. 6 ல் குட்டை காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த குட்டை பகுதியை நான் எப்போதும் அனுபவித்தது இல்லை என்றால் நான் 3 ஏக்கர் நிலத்தை அனுபவித்து வருகிறேன்.

(11) எனது அனுபவத்தில் 3 ஏக்கர் நிலம் உள்ளது என்று நில அளவையர் கொடுத்த அறிக்கை எதையும் நீதிமன்றத்தில் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கு நடைபெறும் விவரம் எனது தாயாருக்கு தெரியும். என்னிடம் 1.75 ஏக்கர் நிலம் மட்டுமே அனுபவத்தில் உள்ளது என்றாலும் அதனால் தான் நில அளவையர் அளித்த எந்த அறிக்கையும் நான் வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றாலும் சரியல்ல.

(12) நான் ஆவணங்கள் ஏதும் இல்லாமல் பட்டா மட்டும் பெற்றுள்ளேன் என்றால் சரியல்ல. எனது தகப்பனார் என்ன வேலை செய்தார் என்றால் IFS Officer ஆக இருந்து Principal Chief Conservator of forest ஆக பணி ஓய்வு பெற்றார். எந்த வழக்கிலும் வாதியை தரப்பினராக சேர்க்காமல் நானும் எனது தகப்பனாரும் உத்தரவு பெற்றிருப்பது வாதியை கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல.

(13) குட்டை இருக்கும் பகுதிக்கு வடக்கு பக்கம் உள்ள சொத்து மட்டுமே எனது தாயாருக்கு கொடுக்கப்பட்டது என்றால் சரியல்ல. எந்த வழக்கிலும் சொத்தில் இருக்கும் குட்டையை பற்றி சொல்லாமல் உத்தரவுகள் பெற்றுள்ளேன் என்றால் சரியல்ல.

(14) என்னிடம் காட்டப்படும் பி.த.சா.ஆ.7 ல் வெறும் 71 ஏர்ஸ் நிலத்திற்கு தான்

M.RAJAKUMARESAN Digitally signed by M.RAJAKUMARESAN Date: 2026.03.16 13:24:26 -0400

கூட்டு பட்டா கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதன் பிறகு ஏற்பட்ட ஆவணமான பி.த.சா.ஆ.11 ல் ஒரு ஹெக்டர் மற்றும் 21.5 ஏர்ஸ் என கண்டுள்ளது என்றால் சரிதான். 71 ஏர்ஸ் என்பது எவ்வாறு 121.5 ஏர்ஸ் என மாறியது என்றால் எனக்கு அவ்வாறு எழுதிக்கொடுக்கப்பட்டது.

(15) 1999 ஆம் ஆண்டில் கொடுக்கப்பட்ட பி.த.சா.ஆ.13 ல் குட்டை காண்பிக்கப்படவில்லை என்றால் சரிதான். எனது தகப்பனாரின் பதவியை பயன்படுத்தியும் அதிகாரிகள் துணையுடன் பொய்யான ஆவணங்கள் எனது தகப்பனார் தயார் செய்தர் என்றால் சரியல்ல. எனது தகப்பனார் உண்மை சங்கதிகளை மறைத்து உயர் நீதிமன்றத்தில் உத்தரவுகளை பெற்றுள்ளார் என்றால் சரியல்ல.

(16) 1.25 ஏக்கர் நிலத்தை தவிர எனது தாயார் மற்றும் எனது குடும்பத்தார் அனுபவத்தில் எந்த நிலமும் இருந்தது கிடையாது என்றால் சரியல்ல.

M.RAJAKUMARESAN Digitally signed by M.RAJAKUMARESAN Date: 2026.03.16 13:24:32 -0400